# சுனாமியும் சூறாவளியும்

**கடல் கொந்தளிப்பு காவியம்**
**சூறாவளி புயல் சுழற்காவியம்**

## TSUNAMI & CYCLONE



தந்தனா மெட்டு
ஊஞ்சல் பாட்டு


வெளியிட்டவர்:

**எம்.எம்.எம். இஸ்மாயில்**

ஏறாவூர்.

# முன்னுரை

அஸ்ஸலாமு அலைக்கும் (வணக்கம்)

உலகெங்கும் பீதிக்குள்ளாக்கப்பட்ட தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த மக்களின் உயிர்களையும், உடமைகளையும் பறித்து முழு உலகையும் அதிரவைத்த சுனாமி என்னும் இச்சோக சம்பவத்தை குறிப்பாக நமது இலங்கையில் ஏற்பட்ட நிகழ்வுகளையும் சித்தரிக்கும் காவியமாக என்னால் முடிந்தளவுக்கு எதிர்கால சந்ததியினருக்கு விளிப்பூட்டும் முறையில் எழுதியுள்ளேன். இதே போன்று 26 ஆண்டுகளுக்கு முன் 1978.11.23ல் நமது நாட்டில் ஏற்பட்ட பயங்கர சூறாவளியைப் பற்றிய "சூறாவளி புயல் சுழற் காவியம்" என்ற ஒரு காவியத்தை வெளியிட்டிருந்தேன்.

அனேகரின் வேண்டுகோலுக்கிணங்க "கடல் கொந்தளிப்பு காவியம், சூறாவளி புயல் சுழற்காவியம்" ஆகிய இரண்டையும் ஒரே நூலாக்கி உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

இப்படிக்கு
எம்.எம்.எம்.இஸ்மாயில்
இல.60, திவுளான,
பொலன்னறுவை.
தொ.பே : 0773646520

**சூறாவளி புயல் சுழற் காவியம்**
**வெளியீடு 1978.11.23**

**கடல் கொந்தளிப்பு காவியம்**
**முதலாவது வெளியீடு – 2005**
**இரண்டாவது வெளியீடு – 2015**

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுமதி வழங்கப்பட்டள்ளது.
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் நிகழ்ச்சி,
இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனங்களில் ஒலி, ஒளிபரப்பாகி
பதிவாகியுள்ளது.

## சுனாமி கடல் கொந்தளிப்பு காவியம்

1. ஆதி பெரியோனே அகிலம் படைத்தோனே
ஜோதி பெரியோனே சுவிட்சமுள்ள றஹ்மானே
நீதி பெரியோனே நிலையான வல்லோனே
நினையாமல் நாட்டங்கள் அருள் புரிவோனே!

2. துய்தான இறைவனின் சோதனையால் வந்த
துயரமாம் அனர்த்தத்தின் துலங்கும் காவியம் பாட
தூயவனே எனக்கு துணைபுரிய
அருள் புரிவாய் ஆளும் றஹ்மானே!
(ஆதி)

3. இந்துமா சமுத்திரத்தில் ஏற்பட்ட நடுக்கம்
எங்குமே தெற்காசியா நாடெல்லாம் முழக்கம்
இருளான சுனாமியின் அலைகளின் தாக்கம்
என்ன வென்று சொல்வேன் ஏக இறையோனே

4. இலங்குமது இரண்டாயிரத்து நான்கில்
துலங்குமது டிசம்பர் இருபத்தில் ஆறில்
துய்தான கிழமைகளில் ஞாயிற்றுக்கிழமை
தூயவனே உன்னுடைய சோதனையு மாச்சே
(ஆதி)

5. ஞாயிற்றுக் கிழமையது நேரம் எட்டு மணி இருபது
நாணிலத்தில் உள்ள மக்களை நடுக்கடலில்
நல்லோனே பெரியோனே திசைகள் எங்கும்
திக்கு தெரியாமல் திசைமாறி ஓட்டம்

6. புலவர்கள் சொன்னதெல்லாம் பொய்யே என்று
பெட்டியில் பொக்கிஷம் பூணாரம் பூட்டிவைத்தவர்கள்
தட்டிக் கேட்டது தடுமாற்றம் பூணாரம் எங்கே?
போட்டு விட்டு ஓடினார்கள் பொக்கிஷத்தை
(ஆதி)

7. புன்னைக்குடா கடலில் புயல் வேகம் போன்ற
நூறு அடி தண்ணீர் நடுக்கடலில் பார்ப்போர்
ஏறாவூரிலிருந்து கொந்தளிப்பு பார்ப்பதற்கு
எடுத்தார்கள் ஓட்டம் எடுபுடி வேகம்.

8. கடலலை ஓய்ந்தவுடன் அரச மர உச்சியிலே
அழகான மீன்கூடை அறுத்தம் போல் பார்ப்போர்க்கு
அழகான கல்வீடோ மண்வீடோ அந்தகரையோரம்
இந்த ஊர் மக்கள் இப்படியான மாட்டல்ல (ஆதி)

9. மருதமுனையில் எண்ணூறு மீற்றர் அலைவேகம்
பன்னிரெண்டு அடிவேகம் கடலலையின் ஓசை
மாட மாளிகைகள் மண்ணோடு தரைமாட்டமாச்சே
மனம் பிழை பொருத்திரும் மாபெரியோனே!

10. கடலோரப்பகுதி கல்முனைக்குடி கல்லாறு
கடும் கடல் அலையின் ஓசை கட்டிடம் எங்கே?
சாய்தமான சாய்தமருதை கரையோரப் பகுதி
கடலோடு சங்கமமாச்சே ஐயோ! அப்பா
(ஆதி)

11. காலி மாநகர மக்கள் காணாத புதுமையது
கரையோர கல்வீடும் போட்டுகளும் போக
கார்கள் மோட்டார் சைக்கிள் கடலே இழுக்க
கரையோர வாடி வீடுகள் உல்லாசம் எங்கே?

12. கொழும்பிலிருந்து மாத்தறை புறப்பட்ட ரயில்
தடமாற்றம் கடல் கொந்தளிப்பு பரிதாபமாச்சே
தண்டவாளக் கம்பியது தலை தூக்கி நிக்க
தப்பியவர்கள் ஒரு சிலரே மாற்றவர்களை காணோம்
(ஆதி)

13. எட்டு பிள்ளைகளையும் இழந்ததோர் மங்கை
ஏங்கித் தவிக்கும் துடி துடிக்கும் காட்சி
கண்ணிலே கண்டோர் யாராக இருந்தாலும்
கல்லான நெஞ்சையும் புண்ணாக்குமம்மா

14. உயிரை இழந்தவர்கள் எத்தனையோ பேர்கள்
உடைமை இழந்தவர்கள் எத்தனையோர்கள்.
கல்வீடு நகை நட்டு அத்தனையும் இழந்து
காணாத் துயரில் கண்ணீரும் சிந்தி
(ஆதி)

15. கல்முனைக் குடியில் ஒரு சம்பவம் உண்டு
காணாத புதுமையும் சொல்கிறேன் கேளு
ஒன்பது மாதக் குழந்தை உயிருடன் ஒன்று
ஓங்கும் மரத்தில் தூங்குவதைக் கண்டு வியந்து

16. ஊடகங்கள் எல்லாம் ஓடோடி வந்து
ஒளிபரப்பியது வானொலியில் அன்று
இறைவனின் செயலால் எல்லோரும் நம்பி
ஏங்கி இரக்கினார்கள் இறைவனை நம்பி (ஆதி)

17. மூதூரில் அறுனூர் பேர் பலி எங்கும் மரண ஓலம்
ஆராயிரம் குடும்பம் அகதிகள் ஆச்சி
ஆலையடிச் சேனையில் அகதி முகாம் உண்டு
ஆண்டவனே அனைத்தும் பிழை பொறுப்பாய்

18. யாழ்ப்பாணம், முல்லைதீவு, ஹம்பாந்தோட்டையில்
வடமராச்சியில் மக்கள் வகையாக மாட்டல்
வளங்கொளிக்கும் பாவற்குளம் பரிதாபமாச்சே
கிளிநொச்சி வவுனியா கிடுகிடுவென செய்தி
(ஆதி)

19. பொன்னான பொத்துவில் மண்ணாகிப் போச்சே
அருகம்பை வாடிவீடு அணலாகிப் போச்சே
அடியோடு மண்ணோடு தவிடுபொடி அநியாயம்
முன்னாள் அமைச்சர் மனைவி மக்கள் மீட்பு

20. வால்வெட்டித்துறையும் காங்கேசந்துறையும் நாசம்
வடக்கு, வடமராச்சியில் மண்ணாகிப்போன
முல்லைத்தீவு மக்களின் மூர்க்கமான செய்திகள்
அக்கரைப்பற்று நிந்தவூர் நிலைமாறிப் போச்சே
(ஆதி)

21. காத்தான்குடி, கதிரவெளி, களுவாங்கேணி, மாங்கேணி
வாகரை, பனிச்சங்கேணி, விட்டதா கொந்தளிப்பு
கல்குடா, சவுக்கடி மக்கள் சஞ்சலம் ஆச்சே
காட்டுத்தண்ணீர் மோட்டுத் தண்ணீர் கடுமோச மாச்செ

22. கல்முனையில் கறடு முறடான தகவல் ஒன்று
புதுமாப்பிள்ளை சோடியுடன் துயில் தனிலே
பெண் அழகு பொண் அழகு பெண் உறக்கம் ஓங்க
பூர் கடப்பால் வந்த நீர் புரட்டி உருட்டியதாமே
(ஆதி)

23. சாய்ந்தமருதையில் சகலரையும் திகிலவைக்கும் செய்தி
மூன்று நாளைக்குப் பிறகு வள்ளத்துக்குள் குழந்தை
சிரித்த முகத்துடன் சின்ன அம்மா கண்ணீர் ஓசை
சின்னப்பிள்ளை தப்பியது ஆண்டவனுடைய பெருமதிம்

24. மங்காத மருதமுனையில் மகிமையுடன் கண்டேன்
மக்களோடு பள்ளிவாசலில் நானும் இருந்தேன்
பார்க்கமுடியாத சொல்லொன்னா துயரக் கண்ணீரை
சுன்னத்துப் பண்ணிய மகனாரையும் காவல் கண்டேன்
(ஆதி)

25. மீன்பாடும் இலங்கை மாநகரில் கொந்தளிப்பு
மீனவர் வள்ளங்களும் தோனியும் வலையும்
மீனவர் மீன் தொழில் செய்வதற்கு பேதலிப்பு
மீனவரை விழுங்கியது கடல் கொந்தளிப்பு

26. கதிரவெளி, கொலணி பாடசாலை மடம் தண்ணீர்
கண்க்கான காணிவளம் வேளாண்மை மண்ணோடு
கட்டிடம் மாளிகை மண்ணோடு தவிடு பொடி
கருணை மனம் பொருந்திட காத்தருள் ஆண்டவனே
(ஆதி)

27. திஸ்ஸமகாரம மக்கள் திசைமாறி போனபலர்
காலிக்கோட்டையது பட்டணமாம் பரிதாபம்
காணாத பலபேர் உயிரிழப்பு உண்டு
காண முடியாத பூங்கா வனம் மயானம்

28. இலங்கை மக்கள் இனசனம் இழந்து ஓட்டம்
ஏதோ ஒரு வகையில் உற்ற நண்பர் இழப்பு
ஏதோ ஒரு வகையில் மனித பிணங்கள்
இறைவா வேண்டுகிறோம் உன்னிடம் பிரார்த்தனை
(ஆதி)

29. தென்னை, வாழைமரம், கமுகுமரம் சாய்ந்தன
தென்னாசிய கண்டமே சீறிய அழுத கண்ணீர்
சிறிலங்கா நாட்டிலும் வேட்டைக்கு வேட்டு
சின்னா பின்னமாகிய சிதைந்தது மாச்சே
(ஆதி)

30. கல்வீடும் களிமன் வீடும் கரைந்தே ஓட
கண்மணியான பாலகரை தொளுவத்திற்குல் தேட
கதறியவன் தாய் கண்ணீரே சிந்த
கல்லே கரைந்தாலும் கண்மணியே காணோம்

31. தன்னுடைய தங்கை கணவனை இழந்ததுமுண்டு
நிந்தவூரில் மார்க்க அனுஸ்டானம் பேணவழியில்லை
வேறஒர இடமாவது அமைத்துக் கொடுக்க
முயலுக்கு மூன்றுகால் முயலக் கொம்பு எங்கே?
(ஆதி)

32. காணாத மனிதர்களை எல்லாம் காண வைத்தது
சிதைந்து போன சிறிலங்கா சிறியதொரு தீவு
சீர்பொங்கும் கடல் பொங்கும் வங்காளக் கடல்
சுனாமி அனர்த்தம் கடல் அலை பொங்கியதாம்

33. கோடான கோடி கோடிஸ்வர பணமெங்கே
கொண்ட மனைவி மக்கள் எங்கே
கொள்கை விட்டு மாறாத கல்லுமனது
இனிமேலாவது இணைந்துவாழ இரும்பு மனமோச்சே?
(ஆதி)

34. மாலை தீவு மக்கள் மன்றாட்டம் என்ன
மணத்துக்கும் குணத்தக்கும் மாசி கருவாடு
சுற்றளவு மேற்பரப்பு சிறிய விஸ்திரணம்
சிறிய தீவுகள் சீரழிந்து அமிழ்ந்ததாம் அவலம்

35. புன்னைக்குடா வீதியிலே பொன்னான வீடுகள்
பொங்கி எழும்புதாம் புயல் வேகத் தண்ணீர்
தாமரைக் கேணியிலே தலைதாண்டிப் போனதாம்
மீராட கேணியிலே மீதம் ஏதுமில்லை
(ஆதி)

36. கல்லடிப் பாலமது கடலாக மாறி
கணக்கில்லா சனங்கெளல்லாம் கண்ட திசை மாறி
சொல்லாண்ணாத் துயரத்தால் ஓடோடி வந்து
திரண்டார்கள், அனைவரும் அரசையடியில்

38. கண் மூடி முளிக்குமுன் கண்ட தொரு காட்சி
என்றென்று மக்களெல்லாம் ஏங்கித் தவித்து
ஆண்டவனைப் புகழ்ந்துமே அனைவரும் கூடி
ஆறுதல் கூறினார்கள் கண்ணீரும் சிந்தி
(ஆதி)

39. ஆசியா கண்டத்தில் அதிர்ந்த உயிரிழப்பு
இலங்குகின்ற இலங்காபுரி நாட்டில் ஒரு வேட்டு
எண்ணில் அடங்காது ஏட்டில் எழுத முடியாது
இறைவனுடைய சோதனைக்கு எல்லையுண்டோ?

40. சீர் பொங்கும் சிறிலங்கா சிறியதொரு தீவு
சிங்கப்பூர் போன்ற இயற்கைவளம் நாடு
தெங்கு கொக்கோ றப்பர் தேயிலை வளம்
மீன்பாடும் கடல் சுற்றளவும் தேசமே நாசம்
(ஆதி)

41. நான்குமத மக்களுக்கும் நல்லதொரு பாடம்
நவீனமயம் கணனி மயமான உலகத்தில்
நம்பவைப்பார்கள் நல்லபல செய்திபல
ஆய்வுசொல்ல முடியாது ஆண்டவனுடைய தீர்ப்பு

42. கடற் தொழிலாளர்களுக்கும் கடமைக்கு உண்டு
கடல் வள்ளங்களும் தோணிகளும் வலைகளும்
கண்மணியான மனைவி மக்கள் காணதாத துயர்
கடலே விழுங்கியது நான் மட்டுமே தட மாற்றம்
(ஆதி)

43. பிள்ளை தாய் தந்தை மதிக்காத காரணமோ
பெரியோர்க்குருநாதரை மதிக்காத காரணமோ
இனசனம் பந்துக்களை மதிக்காத காரணமோ
எதிர்கால சந்ததியினர் மனம் பொறுப்பாய் இறைவா!

44. சோகமயம் சுடுகாடு மயானத்தில் மாண்டோர்
சொல்லன்னா நாய்கள், காகம் மனித வேட்டை
டயர் பெற்றோல் ஊற்றி எரித்தார்கள்
ஒன்பது நாளைக்கு பிறகு ஊர்மக்கள் தீர்ப்பு
(ஆதி)

45. கொள்ளையடித்த வித்தைகள் கேளுங்கள் அம்மா
ஊரிலுள்ள TV ரேடியோவுக்கு உரிமையாம்
உரிமை பேசுதல் மாறுதல் மாயவனே
உரிமைக்கு உரிமை உறவினர் உண்டாம்?

46. தன்னுடைய மனைவி மரணமெனும் தாளம்
தங்கநகை அடையாளம் தாலியது இலக்கு
தடமாற்றம் தட்டிக் கலட்டியவுடன் துணிவு
வகையாக மாட்டல் அரசாங்க கூட்டில்
(ஆதி)

47. இது மட்டுமா இவர்களது திட்டமது ஆட்டம்
பொம்மையாக பேர்வழிகள் மித்தமது தொட்டம்
சொல்லவேண்டுமா இவர்களின் திட்டம்
கணக்கிலடங்காத எழுதிமுடியாது வித்தைகளுண்டு

48. பசுத்தோல் போற்றிய புலிகளுக்கு வேட்டை
பைலுக்குள் பாவை அவளுடைய பெயர் பைங்கிளியாம்
பங்கீட்டு பருப்பு முதல் அரிசிமுதல் பாவியர்களுக்கு
பங்கீட்டு ரூபாய்க்கும் வேட்டையது வேட்டை
(ஆதி)

49. உணவுமுத்திரை ஈட்டுக்கு வட்டிக்கு குட்டி
ஒன்றுக்கு முக்கால் ஒருமாத வட்டியாம்
விதானைக்கும் இதில் ஒரு பங்கு உண்டாம்
பங்கு இல்லாவிட்டால் பகிரங்க மாட்டல்

50. கூட்டுறவு மெனஜேரிடம் நட்பு தொடுப்பு
ஒரு மாதம் பங்கீட்டில் ஒரு ஒப்பந்தம்
விதானைக்கும் இதில் ஒரு பங்காம்
பெருச்சாலிகளின் வேட்டு ஏழைவயிற்றுக்கு வேட்டு
(ஆதி)

51. அரிசிக்கடை அலியார் அறைகுறையாக நிறையாம்
அரசாங்க வலையில் அகப்பட்டு விட்டான்
ஆறுமாதம் அரசாங்க மறியல் தீர்ப்பு
ஆறாயிரம் ரூபாயும் அவசரத் தெண்டம்

52. கூலிப்பட்டாலம் என்னும் ஒரு கூட்டம்
கையாட்கள் மெய்யாட்கள் என்னும் சில கோஷ்டி
மாடாடு தொழுவம் வீடு என பதிவு
பங்கு பதிவாளருக்கு மற்றத்துக்கு பே.... பே....
(ஆதி)

53. ஊரைச்சுற்றியது தொண்டர் படைகாவல்
உழவாளி ஊருக்குள் உள்ளவனும் கள்வனும்
உம்மாவோ சத்தியம் நாலு பிள்ளையோ சத்தியம்
ஒன்பது வீட்டு நகையும் ஒருவனுடைய கையில்

54. புதுமையான கடல் அலையின் ஓசை
போட்டபணம் தெரியாது இட்டபணம் தெரியாது
பொக்கிஷம் பூணாரம் பெட்டியோடு போச்சுதே
புலம்புகிறால் பூ உம்மா பெட்டி எங்கே
(ஆதி)

55. பூ உம்மாட புலம்பலுடன் புண்ணியமென
திருடர் கோஷ்டி திரண்டார்கள் கூட்டம்
திட்டம் தீட்டினார்கள் கொந்தளிப்பு வரும் என
அக்பர் புற கிராமத்தில் உட்புக வேண்டாம்.

56. ஒருசிலரை பிரச்சாரத்தில் ஈடுபடுவோமென
ஒரு கோஷ்டி உள்ளுக்குள் நுழைவோமென
உன்னுடைய தம்பி தங்கையை தேடுவோமேன
ஊரிலொரு பொக்கிசத்தை சுறுட்டினார்கள் அவர்கள்
(ஆதி)

57. தங்கையை கண்டேன் என மாசாலக் கண்ணீர்
தங்க நகை கழட்டியவுடன் அக நகைப்பவனுக்கு
இந்த மையம் எங்கடது அல்ல என்ற கண்ணீர்
இப்படி இனி மேலும் கிடைக்க வேண்டும் இறைவா!

58. வீதியால வருவோர்க்கு வாருவக்கட்டு
ஓரமாய் வருவொருக்கு ஒரு பங்கு வாக்கு
அழுகிய சடலம் ஆமினா உம்மா அல்ல
அதிலுள்ள நகை எல்லாம் என்னுடையதும்.....

(ஆதி)

59. மூன்று பேரிடமும் முண்டல வாங்கு துண்டு
மூர்க்கமாய் கேட்டால் மூஞ்சியை உடைப்போம்
முண்டிச் சுவரை கிளப்ப மூன்று பேரும் நாங்கள்
முடிந்தத போதும் முடிச்சியுடன் மாறுவோம்

60. வாசிக சாலை வீதியிலே நின்றவருக்கு பே... பே...
வழிமறித்து காவல் புரிந்தோர்க்கு பே... பே...
பாஸ் போர்ட் கைவசம் வகையாக கொழும்பு
அவசரமாய் மூன்று பேரும் வெளியே பறப்பு

(ஆதி)

61. மாரி அது பொங்கு தாம் கடல் கொந்தளிப்பு
மலையளவு கண்ணீர் சிந்தியது போடியார்
மாடாடு கோழியது பண்ணை எங்கே
மண்ணாகிப் போச்சு மனிடனே ஆண்டவா

62. வேளாண்மை அறுவடை கூலியது கொடுமை
கூலியக்கார மக்களுக்க கொடுக்காத கொடுமை
குள்ளவன் போடியவன் கூலிகொடாத கொடுமை
குண்டகம் மனதில் கொண்டவன் அவன்

(ஆதி)

63. பக்கத்து வீட்டிலையும் பருவமடைந்த குமர்
பக்கத்து வீட்டுக்காரர் பாலர் போடியாராம்
கொடுப்பது வாம் வட்டிக்கும் குட்டிக்கும்
பாவியவன் மனம் கல் மனமாச்சே?

64. ஊாரிலொரு போடியாராம் கொடியவன் அவன்
ஊரிலொரு பகுதித்திருட்டுச் சொத்தாம் அவை
ஊரே அழுது புலம்பிடும் நேரமது
இல்லை என்று சொல்லிவிட்டான் பே... பே...

(ஆதி)

65. பக்கத்து வீட்டிலேயும் பசிக் குரல்
பட்டறை நெல்மணிகள் கொந்தளிப்பில் ஓட
பாவியவனுடைய ஈமான் இளகுதேயில்லை
இனிமேலாவது இளகவைப்பாயோ இறைவா.

66. மீண்டும் ஒரு கொந்தளிப்ப மின் வேகம்
மின்னு வதெல்லாம் கடல் அலையின் ஓசை
மீண்டும் வருமாம் பொய் வாந்திதகள் வேகம்
மீள வராமல் பவமன்னிப்பு வேண்டுகிறேன்
(ஆதி)

67. பாடசாலையில் பகிரங்க கூட்டம்
பட்டினி பசி தீர்க்கும் நிவாரணக்கூட்டம்
பதறித் துடித்து எடுத்தார்கள் சேவைகள்
விவேகமாய் செய்தார்கள் நிவாரணச் சேவை

68. சம்மாந்துறை அகதிமுகாமுக்கு சென்றேன்
சாதிமதம் பாராமல் சேவைகள் கண்டேன்
சன்மார்க்கப் போதர்களின் சமநீதியைக் கண்டேன்
சமுக தொண்டர்களின் சேவைகளையும் கண்டேன்
(ஆதி)

69. அரசாங்க மந்திரிகள் அவசர அனுமதி
அரசாங்க விமானங்கள் அகாயத்தில் பறக்க
அக்கறைப்பற்று முதல் ஆக்கமாய் பார்வையிட்டு
கொடுத்தார்கள் உடனே அவசர ஓடர்

70. ஏற்றமிகு இலங்கைக்கு ஏற்றிப் பறித்தார்கள்
உடுபிடவை பால்மா குழந்தைகளுக்கு
அகதிமுகாமிற்கு சென்று அணியாய் பகிர்ந்தார்கள்
சாதி பேதம் பாராது சகலருக்கும் கொடுத்தனர்
(ஆதி)

71. அயல் நாட்டு உதவிகள் அளவுதனில்லா அளிப்பு
வெளிநாட்டு டாக்டர்கள் அரிய பலசேவைகள்
அன்றிய நாட்டு பொருட்கள் அளவுதனில்லா
அளவுதனில்லா பொருட்கள் அன்பளிப்பாய் வந்தன

72. தொன்நூற்று எட்டு விமானங்கள் தொலைநாட்டு உதவி
தொன்கணக்கில் பொருட்கள் வந்து சேர உதவி
மருந்து மாத்திரைகள் அவசர சேவைகளுக்கு
மக்கள் மனநிறை மருத்தவ சேவைகள்
(ஆதி)

73. தென் ஆசிய தனவந்தர்கள் வந்தார்கள் பல பேர்
அழிந்து போன நாடு மீண்டும் புனரமைக்க
அள்ளிக் கொட்டினார்கள் சிறிலங்காவை சீர் செய்ய
ஆண்டவனே பெரியமனம் அவர்களுக்குண்டு

74. ஈகை மனம் படைத்த ஈமானுடைய மக்கள்
இனமதம் பாராது கொடுக்கின்ற பொருட்கள்
இரக்கமுடன் கருணையுடன் ஒன்று சேர்ந்து
ஏற்றிப் பறித்தார்கள் எல்லாமிழந்த மக்களுக்கு
(ஆதி)

75. கொள்கைக் கோஷ்டியின் திட்டத்தை கேளும்
மொழிவிளங்காத பௌத்த மதருகுவிடத்தில்
மாற்றுங்கள் லொரியை ஏற்றுங்கள் ஊருக்கு
இரவோடு இரவாக ஏப்பம் விட்டார்கள்

76. கள்வர்கள் கயவர்கள் கட்டுக்கடங்காதவர்கள்
கற்ற வித்தைகளை காட்டும் ஒர தருணம்
கண்டும் காணாத வர்களைப் போல மடக்கல்
கண்ணீரும் கம்பலையும் கயவத் தொம்பல்.
(ஆதி)

77. மாடாடு கோழியது பண்ணை பெரிது
மாறியது காலமது மாரி மழை பொழிய
மகளுடைய மக்கள் எல்லோரும் அடங்க
மன்றாட்டம் என்ன போராட்டம் என்ன

78. எங்களுக்கு உதவி என்னவானாலும் வேண்டும்
ஏலாது இயலாது உதவியே தாருங்கள்
ஏழையவன் கண்ணீரும் கம்பலுடன் கேட்டான்
ஏழையவன் ஈயாதவன் கைவிரித்தே பே... பே...
(ஆதி)

79. பெருஞ்ஞாலிகள் என்னும் பெருமை பேசும்கூட்டம்
பெரியதொரு உதவி மக்களுக்கு நாங்கள்
நாலுபெரிய மனிதர்களின் தாங்கள் பெரியோர்கள்
மாநிலம் போற்றத்தக்க மனிதர்கள் நாங்கள்

80. மாமுடை அரிசி சீனி பருப்பு முதல் கொள்ளை
மாமனார் மாமி முதல் புன்சிரிப்பு வீட்டில்
மாயவர்கலே மாட்டல் மக்களிடம் தந்திரம்
மக்கள் ஆர்ப்பாட்டம் வகையாக மாட்டல்
(ஆதி)

81. மக்கர்களே நீதிமன்றம் காவலரையறையின்றி கூட்டில்
மடையர்களின் மண்கோட்டை மண்ணாகிப் போச்சுதே
மடக்கிப்பிடித்து மக்கள் தோல் உரியாதது
மன்னிப்பு மக்களிடம் கேட்டால் மண்டையுடையும்

82. ஆட்சி செய்கின்ற அரசை சகிக்க முடியாது
அழுத குரல் புலம்பலோசை சகிக்க முடியாது
அன்றிய நாடுபல சேவை மறக்க முடியாது
அவசர சேவைகள் அனைத்தையும் மறக்க முடியாது
(ஆதி)

83. இலங்கை அரசை வேண்டுகிறோம் நாங்கள்
பெஞ்சாலி பேர்வழிகளை இனம் கண்டு நீங்கள்

பெரும் உதவி மக்கள் மயம் வந்துசேர
தட்டிக்கேட்டு தண்டனை கொடுங்கள் நீங்கள்

84. மானிடனே ஆண்டவனே மன்றாட்டம் என்ன?
மாநிலத்தில் மனிதகுலம் வேண்டுகிறோம் நாங்கள்
மங்காத மன்னவனே மனம் பிழை பொறுத்திட
பத்து நாட்டு மக்களின் பாவம்மன்னிப்பாய் இறைவா
(ஆதி)

85. மாதாங்கள் பலவாகும் மறைவா நினைவுண்டோ
ஒருவருடம் இருவருடம் சகாப்தம் முடிந்தாலும்
ஓயாது சுனாமி பேரலையின் வேகம்
ஒரு பரம்பரை முடிந்தாலும் உன் நினைவுமாறாது.

86. இனிமேல் இருக்கின்ற மக்கள் இளகிய மனதுடன்
எல்லோரும் சமமாக சேர்ந்து இரத்தமது சிவப்பு
இன பேதம் சாதி பேதமைகள் மறந்து
இனிமேலாவது இரக்கத்துடன் இணைந்து வாழ்வோம்.
(ஆதி)

87. சிறிலங்கா அரசை வேண்டுகின்றோம் நாங்கள்
சீறிய பேரலையின் நாளாக சுனாமி
விடுமுறைநாயாக விடுவிக்க வேண்டுகிறோம்
இக்காவியம் பாடியவர்கள் அனைவரும் வாழி!

# புயல் சுழற்காவியம்

1. ஆதியிறையோனே ஆழும் றஹ்மானே
ஆயிரத்தித் தொள்ளாயிரத்தி எழுபத்தி எட்டில்
நவம்பர் இருபத்தி மூன்றாம் திகதிதனில்,
சீறிச் சினந்த சூறாவளி வேகம்.

2. ஏறாவூரில் அடங்கிய மீராலெவ்வை அவுலியா,
அவர்கள் பொருட்டாலும்,
மட்டுநகர்தனில் அடங்கிய மௌலானா
அவர்கள் பொருட்டாலும்,
மாவடியில் அடங்கிய மௌலானா
அவர்கள் பொருட்டாலும்,
புயலின் பூங்காரம் உரைக்கிறேன் காப்பு.

(ஆதி)

3. எழுபத்தொரு ஆண்டு பின்தனிலே
ஏங்கவைத்த ஏவுகனை வேகம்,
ஏற்றமிக தங்கிய ஏறாவூர் தனில்
ஏங்க வைத்தாய் இறையடியோனே

4. ஆடும் ஒரு பெட்டி, மாடும் ஒரு பெட்டி
அசைவில்லா இஞ்சின் இல்லாதியங்க.
ஏறாவூர் தனியிருந்து கற்குடா வரையும்,
இஞ்சின் இல்லாப் பெட்டி இரண்டு மிஞ்சியது வேகம்

(ஆதி)

5. ஏறாவூரில் வகையான பொய் வதந்தியொன்று,
கீழ்க்கடல் பொங்கியெழும்புதாம் என்று,
சிறியவர் பெரியவர் தாங்க முடியாது சலிப்பு.
றயில் பெட்டி தனில் தஞ்சம் புகுந்தோருமுண்டு.

6. மேன்மை தங்கிய மீராடகேணி,
மிச்சமெதும் இல்லாமல் அனலாய் பறந்து,
கடலோரக் கிராமங்கள் தளவாய் உட்பட,
பார்க்கப் பாரிதாபம் கேளுங்கள்ளம்மா.

(ஆதி)

7. கிழக்கிலங்கை தனிலொரு வானெலி நிலையம்.
கிழக்கு வெளித்தவுடன் கேட்டவொரு செய்தி,
கீழ்மட்டம் , தரைமட்டம் வானொலி நிலையம்,
பார்த்தவர்கள் கேட்டவர்கள் செய்தி என்னாச்சி.

8. மட்டுநகரிலுள்ள மாபெரும் கச்சேரி,
அரசமரம் விழுந்ததினால் சிதறுண்டு போச்சி.
அரசாங்கக் கந்தோர்கள் அணைத்துமே போச்சி,
அய்ஜய்யோ அறிவாயே அனியாயதத் தொண்டம்.
(ஆதி)

9. மட்டுநகர் அழிந்ததென்று மக்கள் புலம்ப,
மாணிக்க வியாபாரிகள் மட்டில்லாயியங்க
மாண்புமிகு சீமான்கள் பல பொருட்களைக் கொண்டு,
லொறி, வான் மீது ஏற்றிப் பறித்தார்கள்.

10. மட்டுநகரிலுள்ள பிரயாணி மடம்,
மதிக்க முடியாது பிரயாணி மடத்தை,
பிரயாணம் செய்த மக்கள் பதறி நிற்க,
பிரயாணி தங்குவதற்க பேதலிப் அப்பா.
(ஆதி)

11. மட்டுநகர் மறியவீடு மோட்டால பறக்க,
மட்டில்லா மறியாளர்கள் மாயமாய் மறைய,
மொட்டில்லா காவலாளி முழுப்பேரும் போக,
தப்பினார்கள் மறியாளர்கள் தவிச்சமுடியலடிக்க.

12. மீன்பாடும் தேன் நாடாம் மட்டுமா நகரம்,
மீனவர் வலை தோணியை கவ்வியது கடல்,
பால் பொங்கி வழிந்திடும் மட்டுமாநகர்,
பாலை வனம்போல் காட்சி தரும் காட்சி
(ஆதி)

13. மட்டுநகர் மாநிலத்தில் மட்டில்லா நெல்மணி
பதிணைந்து கோடி ரூபா முதலுடைய நெல்லு,
அரசாளுனர்க்கு அனியாய மாச்சி,
அனியாயந் தானே அரசாளுனர்க்கு

14. மின்சாரக் கம்பங்கள் மின்வேகம் முறிய,
மின்னுதவி இல்லாமல் தட்டுத்தடுமாற,
புரியாத மக்கள் ஆண்டவனை வேண்டி,
புலராத மக்களெல்லாம் புலம்பியே அழுதோம்.
(ஆதி)

15. குப்பிலாம்ப குடுதியோடு பறக்க,
குத்து விளக்கும் குமுளோடு பறக்க,
குசினியில் இருந்தவர்கள் கூப்பாடும் போட,
குத்திக் கிளப்பியதாம் சூறாவளிக் கோரம்.

16. பச்சிளம் பாலகரைக் கக்கத்தில் இடுக்கி,
வா மகனே பள்ளிடம் போவோம் என்று
அணல்வேகம் புயல்வேகம் அஅடிச்சிப் பறிச்சி,
பாலகரின் உயிரைப்பறித்தது பேய்க் காற்று

(ஆதி)

17. வெள்ளிக்கிழமை தனில் கொத்துபா நேரம்,
சங்கையான சதக்கா ஈந்து பகிரயில்லை,
ஏழை மிச்கீன்கள் மீது ஈவிரக்கமில்லை
சூறாவளி வேகத்தால் இருந்ததும் இல்லை.

18. பணம், பொருளடக்கிய முதலாளி வர்க்கம்,
வழிதவறிய அநாதைக் குழந்தைகள் தவிக்க,
வாரி வழங்க மனமில்லாத வர்க்கம்,
பெட்டியோட போலினுக்க முன்னின்ற வர்க்கம்.

(ஆதி)

19. ஏழைச் சிறுவனுக்கு கத்னாவுக்கில்லை,
ஏழையெழிய குமார்கள் வாழ வழியில்லை
அத்தனைக்கும் வேட்டுவைக்கும் சீமான் பல கோடி,
அத்தலைந்து போனதடா அநியாயத்தோட

20. பெட்டியிலே இருந்தபணம் காத்திலே பறக்க.
பட்டியோட மாடும் கன்றோட சாவ,
ஓடி வந்த பஸ் வண்டி ஒரு பக்கம் சாய,
உள்ளபடி தந்தி சொல்ல முடியாமல் போக

(ஆதி)

21. பட்டியோட மாடு வைத்திருந்த போடி,
சூட்டியோ ஒன்று கொடுப்பானா வென்று
ஏழை எளியோர்கள் போடியிடம் கேட்க,
இல்லையென்று சொன்னானாம் ஈமானில்லாப் பாவி

22. அயலூர் சீமான்கள் ஏறிட்டுப் பார்த்து,
அரிசிமுதல் ஆடைவரை தான்கொண்டு வந்து,
அளவுதனில்லா பகிர்ந்தே கொடுத்து.
கொள்ளை நரிக்கூட்டம் குறுக்கேதான் பாய்ந்தன.

(ஆதி)

23. கொள்ளையடித்த கதை சொல்கிறேன் கேளு,
அரிசிமுதல் பருப்புவரை குள்ளநரி வீட்டில்,
மாமியாரும் மாமனார் பாராட்டிய புகழ்,
மருமகன் நடாத்திய மாயாஜால வித்தை

24. வண்டியோடு மிசின்கொண்டு பண்டங்களேற்ற
பார்த்திருந்த எளியோர்கள் பதரித் துடிக்க,
பாவியர்கள் நடத்தியது தேசத்துரோகம்,
பார்த்தீர்களா இப்போது நீதிநியாயம்.

(ஆதி)

25. கூட்டுறவு கடை பூட்டியது மனேஞர்,
கேட்டியளா செய்தியை காவல் தொழிலாழி,
அலவாங்குக் கம்பியுன் அணிவகுத்து நின்றான்,
அணியாயம் பண்ணுவதற்கு அவனும் முன்னின்றான்.

26. மாடு அறுத்தோரும் ஆடும் அறுத்தோரும்,
ஆளுக்கொரு துண்டெடுத்தோரும்,
ஆளுக்கொரு துண்டுக் கருவாடெடுத்தோரும்,
அனியாயம் அப்பா சூறாவளித் தொண்டம்

(ஆதி)

27. புகையிலைக் கும்பமது சிததரிப் பறக்க,
புகையிலைத் தொழிலாளி போடிமார் பொறுக்க,
சீறிச் சினந்த சூறாவளியால்,
சீரழிந்து போனதாம் புகையிலைக் கும்பம்

28. ஓட்ட வீடு அடைக்கமுடியாது,
ஒரு துண்டு மழைக்கோடு கொடுக்கமுடியாது,
அறுதலியின் வீடு அடைக்கமுடியாது,
ஆண்டவனே யார்தான் உதவிசெய்வாரு.

(ஆதி)

29. வயல் காட்டில் உள்ள மகனொருவன்,
கொளக்கொம்பில் வைத்தார்கள் மகனை,
ஓணாண் வடிவம்போல் அவருடையமேனி,
கசக்கிப் புளிந்தது அவருடைய உடம்பை

30. சில்லறைக் கடைகள் பல சீரழிந்து போச்சி,
சில சாமான்கள் பல பெறமுடியாமலாச்சி.
சீனிமுதல் உப்புவரை கரைந்தே போச்சி,
சின்ன முதலாளியுடைய கைமுறிந்து போச்சி

(ஆதி)

31. வயல்காட்டிலுள்ள மக்கள் வரம்புகளில் ஓட,
வந்தவொரு யானையிடம் வகையாக மாட்ட,
சூறாவளி வேகத்தால் துயரமே துயரம்,
தம்பியவன் சிக்கியது தனியானைக்கிட்ட

32. வெளிசாட்டுக் கூடாரம் விளங்காத மக்கள்,
வெட்டை வெளிச்சத்தில் விரித்திதட்ட மக்கள்,
விதியென விதியா எங்கள் தலைவிதியா
மட்டைவேண்டப் பணமில்லை மாயவனே காரும்.
(ஆதி)

33. வளிமண்டல ஆராய்ச்சி நிலையம்,
வகையாக மாறியது புயல்வேகச் செய்தி,
கம்பில்லாத் தொடர்ப தந்தித் தொடர்பு,
வீசிவிட்டோடினார் தொலைபேசிப் பெட்டியே.

34. தார்றோட்டு ரெயில்றோட்டு தவிடுபொடியாச்சி,
தண்டவாளக் கம்பியது விலைகியதாப் போச்சி,
ஓடிவந்த ரெயில்வண்டி ஒருபக்கம் சாய,
கொழும்புநோக்கிப் புறப்பட்ட ரயில்சாந்தது கீழே.
(ஆதி)

35. அழகுபுதி நகராம் அம்பாறை நகரம்,
அதட்டியடித்தது சீனித் தொழிற்சாலை
அம்பாறை நகர்தனிலே சேதம் குறைவாம்,
அழிவால குறைந்ததும் அம்பாறை நகரம்.

36. கல்லாறு களுதாவளை கவர்திடும் சாய்ந்தமருதூர்
கவியூறுமம்ஊர் நாய்பெட்டிமுனை நாசமாய்ப் போச்சே,
ஆள்களால் கூடியது அக்கரைப்பற்று,
அழிவால குறைந்தது அந்த ஊராமே.
(ஆதி)

37. அரசாங்கம் பகிர்ந்தது மா அரிசி சாமான்,
அதை வாங்கப்போனால் சஞ்சலங்கள் பல,
அடி உதைகள் அழுத கண்ணீருடன்,
அம்மாவோ தாயே அவலக் குரலோசை

38. மாமி மருமகன் மாயமாய் மாற,
மாடிக் கட்டிடமும் மண்டிக்குடிசைக்குள் மாற,
கட்டிய மனைவியைக் காணவில்லையென்று,
கண்ணீர் வடித்தான் கண்மணியே என்று
(ஆதி)

39. கரவாகுப்பற்று கல்முனை நகர்தனில் வாழும்,
கரையோரப் பகுதி கல்முனைக்குடி,
அலைகடல் எழுந்தனவாம் அறுபதடி வேகம்,
அல்லாவே யென்ற கலிமாவின் ஓசை

40. அரிசி குடைந்த அழகுநிறை தாய்,
ஆறுமணி நேரம் அரியபல செய்தியே,
வாளொலிப் பெட்டியில் அதிர்ச்சியூட்டும் செய்தி,
ஐயோ அளதாளே அவலக் குரலோசை

(ஆதி)

41. முகம்மதுத்தம்பி சநந்தக் கடைக்குப் போனான்
சாளமீன் சாமான்கள் வேண்டியவுடன்,
சடுதி புடுதியாய் சைக்கிள் ஓடி,
சாய்ந்து விழுந்தானே சடைச்ச மரமொன்றில்

42. காத்தமாநகர் காத்தான்குடி மக்கள்,
இலங்கைதனில் மேலிட்டோங்கும் மௌலவி மேதை,
மில்லுகளும் மேல்மாடிக் கட்டிடமும்,
தவிடுபொடியாச்சே தரையினிலே அல்லாஹ்.

(ஆதி)

43. வண்ணநிலாப்போல் வண்ணமுகமெல்லாம்,
வகையாகக் கறுத்ததுவே நெருப்புக்காத்துடை வேகம்,
மதிக்க முடியாது தாய் தந்தையைரென்று,
வேசத்தை மாற்றியது சூறாவளி வேகம்.

44. கலியாணம் முடிப்பதென்று ஒலிபெருக்கி பாட,
தண்ணிவாக்க தடபுடலாய் பட்டாசி கொழுத்த,
தம்பி மாப்பிள்ளை தடபுடலாச்சி,
தயவாக வார்த்ததுவே ஆழ்கடல் தண்ணீர்.

(ஆதி)

45. மணற்காற்றில் மணல்மூடிக் கிடந்தோரும்,
மண்ணிலிட்ட புதையல் உண்டியல் முட்டி,
மூலை முடக்கிலிட்ட முட்டி உண்டியல் முட்டி,
மதியாது துலங்கினர் மாயக்கிழயிட்ட முட்டி

46. மூத்தபிள்ளை இளையபிள்ளை முன்பின் தெரியாது,
முன்னோர்கள் சொன்னதை நினைத்துத் தெரியாது,
மூர்க்கமாய் எழுந்துவந்த சூறாவளி தெரியாது,
முழுமுச்சாய் சொன்னதுவே சூறாவளி காற்று

(ஆதி)

47. பள்ளியிலே வாங்கோசை கேட்கவில்லை செயிவில்,
பயபக்தி மதுபோதை தலையேறிவிட்டு
தயவான உலமா தம்பியிடம் சொல்ல
வாயால பறந்தது வாருவக்கட்டு

48. கண்ணியம் மிகுந்ததொரு கற்குடாத் தொகுதி,
வாழைச்சேனை மிறாவோடை ஓட்டமாவடி,
சித்தாண்டி சந்திவெளி முறக்கொட்டாஞ்சேனை,
சீரழிந்ததுவாமே கற்குடாத் தொகுதி

(ஆதி)

49. வேளாண்மை கதிர்பறியாத காலம்,
விதைநெல்லு கொண்டு விதைக்கும் காலம்,
ஏழைகளின் வீட்டில் மங்கும்இல்லாக் காலம்,
விதைத்த விதையும் வீழ்ந்திட்ட காலம்.

50. ஆண்டியிட்ட ஆலமரம் ஆணிவேர் பறக்க,
அலிகார் மகாவித்தியாலயம் அடியோடு பறக்க,
படிக்கப் பாடசாலை மாணவர்க்கில்லை
ஓலை தொட்டவமும் பறந்ததுவே காற்றில்.

(ஆதி)

51. அரசாங்கம் அறிந்ததும் அரசாளும் உறுப்பினர்கள்,
ஆகாய விமானமூலம் பறந்தார்கள் இங்கு,
அழுதகண்ணீர் அவலக் குரலோசை,
அறிவித்தார்கள் உடனே அவசரத் தந்தி

52. அன்னிய நாடுபல ஆர்க்குமாய் எழுந்திட,
அள்ளி அனுப்பினார்கள் அரசாளுநர்க்கு,
வெளிநாட்டு விமானம் விண்ணில் பறக்க,
வெளியரங்கில் போட்டார்கள் பார்சல் பண்டம்

(ஆதி)

53. கூட்டுறவுக் கடைகளில் கூட்டுறவுக் கூட்டம்,
ஹீவென்ன கூலிமார் போடிமார் கூட்டம்,
சமூக தொண்டர்கள் அரிய பல சேவை,
ஊக்கமாய்ச் செய்தனர் சூறாவளிச் சேவை.

54. கூப்பன்மா பிட்டும் இல்லையென்னு கதற,
கோடிச் சீமான்கள் கொட்டியே கொடுக்க,
அரசாங்கமும் அளவில்லா பகிர,
கூக்குரல் கூப்பாடும் விடிந்ததப்பா.

(ஆதி)

55. கீழ்த்தேசம் நாடாளும் மன்னர்கள் சீறியேஎழ,
சீக்கிரமாய் சேவைகள் செய்திட்ட தொண்டு,
அரசாளும் மன்னர்கள் ஆளுக்கொரு விமானம்,
அரியபல சேவைகள் அவசர ஓடர்.

56. பள்ளியில் படிப்பதற்கு புத்தகங்கள் இல்லை,
பாலகரை பாழதவிக்க யாருமே இல்லை,
பக்கத்து பாலகரிடம் கட்டோடு புத்தகம்,
இப்பாலகரை பரதவிக்க யாருமே இல்லை

(ஆதி)

57. பக்கத்துப் பள்ளியிலே வாங்கோசை நாதம்,
உடுத்த உடைக்கு மாற்றுடை இல்லை,
பக்கத்தவர் உடையொன்று கொடுப்பாருமில்லை,
பள்ளிப்பக்கம் போவதற்குத் தலைகுனியா வெக்கம்.

58. சோதனைமேல் சோதனை தவிர்க்கமுடியாதே,
சொன்னவர்கள் கேட்டவர்கள் தவிர்க்கமுடியாதே,
சொல்லமுடியாது அடக்கமுடியாது,
சூறாவளியின் துயரம் பொறுக்கமுடியாது.

(ஆதி)

59. காலுடைந்தோரும் கையுடைந்தோரும்,
காணமுடியாமல் போனோரும்,
தலை உடைந்தோரும் இடுப்பு உடைந்தோரும்,
தந்திரங்கள் ஏதும் பலியாத வித்தை

60. குடிசைதனில் வாழ்ந்தமக்கள் குமிறி எழும்ப,
கூக்குரலும் கூப்பாடும் குடிசைக்குள் ஓசை,
ஆண்டவனை பரிதாபப் பாலகருமொன்று,
மோட்டுவளை விழுந்ததினால் பலியாகிப் போச்சி,

(ஆதி)

61. அழகான அழுமாரி அடுக்கோடு உடைய,
அடுக்கிய பீங்கான்கள் அடுக்கோடு உடைய,
அடுக்கில் இடப்பட்ட சட்டிபானையும் உடைய,
அழகான றேடியோவும் அப்படியே உடைய

62. ஆடுமே போச்சி மாடுமே போச்சி,
அழகாப்போட்ட சேட்டுமே போச்சி,
அடுக்கிவைத்த மானியமும் போச்சி,
அழகாய் இருந்த வாட்டாவுமே போச்சி

(ஆதி)

63. சூறாவளி அனல்வேகம் மொருபக்கம்,
பிள்ளைபெறும் அவதியொருபக்கம்,
மருத்துவரும் வாப்பாவும் மொருப்பக்கம்,
வழுக்கியது குழந்தை வாய்க்கால் தனில்பக்கம்.

64. பிள்ளைபெற்ற தாய் பேதலித்தோட,
பெற்றபிள்ளையைக் காணவில்லையென்றோட,
கிழக்குவெளித்தவுடன் வாக்காலிலோட,
மாண்டுமடிந்ததுவே இன்னாலில்லாஹி.

(ஆதி)

65. அரிசி குத்திய மில்லு அழகாகக் கிறுக.
அதில் ஒரு பிள்ளை தப்பாக மாட்ட,
அறிவு யில்லாச் சாரதி அவதியுற்றுநிற்க,
ஆண்டவனே பறித்தது பிள்ளையின் உயிரை

66. படக்காட்சி ஒன்றுமே பார்க்கமுடியாது,
பார்க்கின்ற மங்கையர் போகமுடியாது,
சினிமாவின் செய்தியேயொன்றும் தெரியாது,
சீரான படக்கோளும் சீரழிந்துபோச்சி

(ஆதி)

67. கல்வீடும் மண்வீடும் கரைந்தே இடிய,
கணக்கான கைமரங்கள் மின்வேகம் முறிய,
சிலாகையுடன் ஓடுகளும் சிதறுண்டு பறக்க,
சீனித்தம்பியவன் சுவருடன் மடிந்தான்.

68. வட்டோடுமரம் வான்தெறித்துப்பறக்க,
வாலில்லாக் குருவி வான்மொட்டப்பறக்க,
வட்டிலப்பம்போல் கருவியதுகுருவி,
மாண்டுமடிந்ததவே பறவைகளெல்லாம்.

(ஆதி)

69. புகழ்பெற்ற நகரம் பொலன்னறுவை நகரம்,
புண்ணியமானதொரு மாணிக்கம்பிட்டி,
பால்பொங்கியெழுந்திடும் பால்மாத் தொழிற்சாலை,
பார்ப்பவர்கள் கேட்பவர்கள் பதறியேயழுவார்.

70. கத்னா பண்ணிய மகனார் இருபேரும்,
கவனிப்பாரோ கேட்பாரோ யாருமே இல்லை,
தண்ணீரைக் காண்பதென்றால் அரிதாத்தவம்,
தாராளமாய்த் தரையினிலே தண்ணீர் குடித்தனர்.

(ஆதி)

71. மதுபோதையிலும் சிலர் மயங்கிக்கிடந்தோரும்,
போதைக்குப்போதை சூறாவளிப்போதை,
உருட்டுப்புரட்டியது சூறாவளிப்போதை
உருண்ட மரம்மொன்று பிடரியெறிந்ததாமே

72. தள்ளாட்டக் கிழவியெல்லாம் துள்ளாட்டம்போட,
தங்கநகை அத்தனையும் மண்ணோடுபோக,
கோப்பையோடு பீங்கான்கள் காற்றிலே பறக்க,
கோரத்தாண்டோமது புயல்வேகக்கொடுமை
(ஆதி)

73. மாமரம் பலாமரம் போச்சே,
தொன்னைமரம் கம்முவ போச்சே,
தண்ணியள்ளும் திதலாந்துமே போச்சே,
தண்ணியள்ளும் முட்டியுமே காற்றிலே போச்சே.

74. அணல்வேகம் புயல்வேகம் ஆக இது என்ன வேகம்,
நரகவெதனையுடைய வேதனை வேதனை,
சிறாத்தல் முஸ்த்தகீம் பாலமுடைய வேதனை,
எண்ணிமுடியாது புயல்வேகக் கொடுமை
(ஆதி)

75. மட்டுநகர் தொகுதியிலே கடலலையின் னோசை,
ம் என்ற சத்தத்துடன் அங்கார ஓசை,
கரையோரக் கல்வீடும் கடலுக்குள் போச்சே,
வோட்டுகளும் வள்ளங்களும் கடலிலே போச்சே.

76. இலங்கைதனில் பேர்பெற்ற கடதாசிஆலைை,
இயந்திரமும் சீட்டீன்களும் சிதறிப்பறக்க,
வாழைச்செனை மக்களை வாழவைத்த ஆலை,
சீறியே பாய்ந்தன குள்ளநரிக் கூட்டம்.
(ஆதி)

77. மட்டுநகர் மாநிலத்தில் மாபெரும் ஆஸ்பத்திரி,
மட்டில்லா நோயாளர்கள் அவதியுறும் போது,
மருத்துவம் பார்க்க மருத்துவர் வரும்போது,
மடக்கியடித்ததுவே பேய்புயல் வேகம்.

78. கடன் காசி பணம் கேட்க முடியாது,
கட்டிய சீட்டுப்பணம் கொடுக்க முடியாது,
கனவான்கள் போடிமாரை காண முடியாது,
காரணம் காட்டியது சொல்லவே முடியாது.
(ஆதி)

79. இக்கவியைப் பாடியவர் அனைவரும் வாழி,
இதை அச்சிட்டோர் அனைவரும் வாழி,
எதிர்கால சந்ததியினரும் படிப்பதற்கு வாழி,
எதிர்கனமாய் கேட்பாரும் நல்லபடி வாழி.

80. தயவாக கேட்போரும் நல்லபடி வாழி,
தப்பாமல் படித்தோரும் நல்லபடி வாழி,
சூறாவளி கவியை பாடினோரும் வாழி,
இக்கவியைப் பாடியவர் இஸ்மாயிலும் வாழி.
(ஆதி)



அச்சு : ஹிரா, ஏறாவூர் - 0652241201